# 10

# ஸுன்னத்தான தொழுகைகள்



அன்று ஷவ்வால் மாதத்தின் இரண்டாம் நாள். பள்ளிவாசல் இமாம், இஷாத் தொழுகை முடிந்தவுடன் உரை நிகழ்த்த ஆரம்பித்தார்.

அல்ஹம்துலில்லாஹ், வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா ரஸூலில்லாஹ் மதிப்புக்குரிய சகோதரர்களே! அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு. அல்லாஹ்வின் அருளால் றமழான் மாதத்தில் பர்ழான வணக்கங் களுடன் சில நபிலான வணக்கங்களையும் செய்து வந்தோம். ஆனால் எம்மில் அதிகமானோர் அந்த நபிலான வணக்கங்களை றமழான் மாதத்துடன் கைவிட்டு விடுகின்றார்கள். இது தவறானதாகும். வணக்க வழிபாடுகளைச் செய்வதில் றமழான் மாதத்தில் பெற்ற பயிற்சியை நாம் பின்னைய காலங்களிலும் செயற்படுத்த வேண்டும்.

நபி ஸல் அவர்கள் ஸுன்னத்தான வணக்கங்கள் பலவற்றை எமக்குக் கற்றுத் தந்துள்ளார்கள். நாம் அவற்றை அறிந்து கொள்ள வேண்டும். அதன் முதற்

படியாக தற்போது நாம் தஹஜ்ஜுத், ளுஹா, வித்ர் போன்ற ஸுன்னத்தான தொழுகைகள் பற்றி நோக்குவோம்.

சகோதரர்களே! தஹஜ்ஜுத் என்பது நடுநிசியில் நித்திரைவிட்டெழுந்து தொழும் தொழுகையாகும். அத்தொழுகையை நிறைவேற்றுமாறு அல்லாஹ் நபி ஸல் அவர்களுக்குக் கட்டளை இடுகின்றான்.

وَمِنَ اللَّيْلِ فَتَهَجَّدْ بِهِ نَافِلَةً لَكَ

''தஹஜ்ஜுத் தொழுகையை நபிலாக, இரவில் ஒரு பாகத்தில் நீர் தொழுது வருவீராக!'' (17:79)

மேலும் அல்லாஹ்வை ஈமான் கொள்கின்ற மனிதர்களின் பண்புகளை அல்லாஹ் இவ்வாறு வர்ணிக்கின்றான்.

''அவர்கள் (இரவில்) படுக்கையில் இருந்து தங்கள் விலாக்களை உயர்த்தி, (எழுந்து அப்புறப்பட்டு) தங்கள் இறைவனிடம் நம்பிக்கை வைத்தும் பயந்தும் (அவனைத் தொழுது) பிரார்த்தனை செய்வார்கள். நாம் அவர்களுக்குக் கொடுத்த வற்றில் இருந்து அவர்கள் (தானமாக) செலவு செய்வார்கள்.'' (32:16).

நபி ஸல் அவர்கள் நடுநிசியில் தனது கால்கள் வீங்கும் வரை நின்று தொழுவார்கள் (புஹாரி) என்று ஆயிஷா ரழி அவர்கள் கூறுகின்றார்கள். இரவுத் தொழுகையை நிறைவேற்றுமாறு நபி ஸல் அவர்கள் தன் தோழர்களுக்கும் ஆர்வமூட்டியுள்ளார்கள்.

அப்துல்லாஹ் பின் ஸலாம் ரழி அவர்கள் அறிவிக்கிறார்கள்: 'நபி ஸல் அவர்கள் மக்களைப் பார்த்து,

اَيُّهَا النَّاسُ، اَفْشُوا السَّلَامَ وَاَطْعِمُوا الطَّعَامَ
صَلُّوا بِاللَّيْلِ وَالنَّاسُ نِيَامٌ. تَدْخُلُوا الْجَنَّةَ بِسَلَامٍ

''மனிதர்களே, ஸலாத்தைப் பரப்புங்கள், விருந்தோம்புங்கள், மனிதர்கள் உறங்கும் வேளையில் எழுந்து தொழுங்கள். அப்போது தடைகள் எதுவுமின்றி சுவனம் நுழைவீர்கள். (திர்மிதி)

மேலே எடுத்துக் காட்டிய அல்குர்ஆன் வசனங்களும் ஹதீஸ்களும் தஹஜ்ஜுத் தொழுகையின் சிறப்பை உணர்த்துகின்றன. இதுபோன்றே லுஹாத் தொழுகையும் சிறப்பு வாய்ந்த ஒரு ஸுன்னத்தான தொழுகையாகும்.

அபூ ஹுரைரா ரலி அவர்கள் கூறுவதைக் கேளுங்கள். ''எனது நேசத்துக் குரியவரான முஹம்மது (ஸல்) அவர்கள், ஒவ்வொரு மாதமும் மூன்று நாட்கள் நோன்பு நோற்குமாறும், ளுஹாவுடைய இரண்டு ரக்அத்துக்களைத் தொழுது வருமாறும் தூங்கும் முன் வித்ர் தொழுகையை நிறைவேற்றுமாறும் எனக்கு உபதேசித்தார்கள்'' (புஹாரி, முஸ்லிம்).

மேலும் நபி ஸல் அவர்கள் கூறினார்கள்

''நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுடைய ஒவ்வொரு மூட்டுகளுக்காகவும் ஸதகாச் செய்வது அவசியமாகும். ஒவ்வொரு தஸ்பீஹ்ஹும் ஸதகாவாகும். ஒவ்வொரு தஹ்மீதும் ஸதகாவாகும். ஒவ்வொரு தஹ்லீலும் ஸதகாவாகும். ஒவ்வொரு தக்பீரும் ஸதகாவாகும். நன்மையை ஏவுவதும் ஸதகாவாகும். தீமையைத் தடுப்பதும் ஸதகாவாகும். இவை அனைத்துக்கும் பகரமாக ளுஹாவுடைய இரண்டு ரக்அத்துக்களைத் தொழுவது போதுமானதாகும்''. (முஸ்லிம்)

மேலே குறிப்பிட்ட ஹதீஸில் நபி ஸல் அவர்கள் வித்ர் தொழுகை பற்றியும் குறிப்பிட்டுள்ளார்கள் அல்லவா? எம்மில் பலர் றமழான் மாதத்திற்கு மாத்திரம் உரிய தொழுகை என்றே இதனைக் கருதி வருகின்றார்கள். நபி ஸல் அவர்கள் வித்ர் தொழுகையை ஒவ்வொரு நாளும் தொழுது வந்திருக்கிறார்கள். அதுமட்டுமன்றி தோழர்களுக்கும் ஏவியிருக்கிறார்கள்.

''அல்லாஹ் ஒருவன். அவன் ஒற்றையை விரும்புகின்றான். ஆகவே அல்குர்ஆனை சுமந்தோரே! நீங்கள் ஒற்றைத் தொழுகையாகிய வித்ர் தொழுகையை நிறைவேற்றி வாருங்கள்'' (அஹ்மத்)

'' உங்களது இரவு நேரத் தொழுகையின் இறுதித் தொழுகையாக வித்ர் தொழுகையை அமைத்துக் கொள்ளுங்கள்'' (புஹாரி, முஸ்லிம்) என்பன அவர்களின் உபதேசங்களாகும்.

ஸுன்னத்தான தொழுகைகள் கட்டாயமானவையல்ல என்பதால் சிலர் அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. இத்தகையோர் கீழ்வரும் ஹதீஸை உற்று நோக்க வேண்டும்.

''மறுமையில் மனிதர்களது செயல்களில் முதலாவதாக விசாரிக்கப்படுவது தொழுகையே ஆகும். எமது இரட்சகன் மலக்குகளிடம் (அவன் அறிந்துகொண்டே கேட்கின்றான்), எனதடியான் பர்ழான தொழுகைகளை நிறைவாகத் தொழுதுள் ளானா? அல்லது அவற்றில் குறைவைத்துள்ளானா எனப் பாருங்கள். நிறைவானது எனின் நிறைவு என்று எழுதுங்கள். குறை வைத்திருத்தால் விருப்பத்துக்குரிய வணக்கங்கள் எவற்றையேனும் செய்துள்ளானா என்று பாருங்கள். அப்படி இருப்பின் அவற்றைக் கொண்டு பர்ழான தொழுகைகளில் காணப்படும் குறை களை நிறைவு செய்யுங்கள் என்று கட்டளையிடுவான்''. (அபூதாவூத்)

ஆகவே, ஸுன்னத்தான வணக்கங்களை நாம் தவறாது நிறைவேற்ற முயற்சிக்க வேண்டும். வல்ல அல்லாஹ்வின் அருளை அதன் மூலம் பெற்றுக் கொள்வோம். ''வஆகிரு த.்.வானா அனில் ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்''

உரையைத் தொடர்ந்து, பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாக மக்களுக்கெழுந்த ஐயங்களை இமாமவர்கள் தெளிவுப்படுத்தினார்.

ஐயம் :- 'கியாமுல் லைல்' என்று அழைக்கப்படும் சொல்லின் விளக்கம் என்ன?

தெளிவு:- இஷாவுக்குப் பின்னுள்ள ஸுன்னா முஅக்கதாவைத் தொடர்ந்து, ஸுப்ஹ் வரை நிறைவேற்றப்படும் சகல இரவுத் தொழுகைகளும் 'கியாமுல்லைல்'' என்றே அழைக்கப்படுகின்றன. குறித்த ஒரு நியம நேரம் அதற்கில்லை. எனினும் இரவின் இறுதிப்பகுதியில் எழுந்து தொழுவது சிறந்ததாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ''அடியான் தன் இரட்சகனுக்கு மிக நெருக்கமாக இருக்கும் நேரம் இரவின் இறுதிப் பகுதியாகும்'. (ஹாக்கிம்) இதற்கான ரக்அத்துக்களின் எண்ணிக்கை குறைந்தது இரண்டாகும். மேலதிகமாக எத்தனை ரக்அத்துக்களையும் தொழலாம்.

ஐயம் :- ''வித்ர்' தொழுகையின் நேரம் என்ன? அதன் ரக்அத்துக்கள் எத்தனை?

தெளிவு:- இஷாத் தொழுகையை தொழுது முடித்தது முதல், கிழக்கு வெளுப்பதற்குள் வித்ர் தொழ வேண்டும். நித்திரை விட்டு எழும்ப முடியும் என்ற நம்பிக்கை இருப்பின் நித்திரை விட்டு எழுந்து தஹஜ்ஜுத் தொழுகையைத் தொழுது விட்டு இறுதியாக வித்ரைத் தொழுவதே மேலானதாகும். முடியாதபோது நித்தி ரைக்கு முன் தொழுது கொள்ள முடியும். இதற்குக் குறைந்தது ஒரு ரக்அத். கூடியது பதினொரு ரக்அத்துகள். மூன்று ரக்அத் மத்திமமானது.

ஐயம்:- ளுஹாத் தொழுகை பற்றியும் சற்று விளக்கிச் சொல்லுங்கள்.

தெளிவு:- சூரியன் உதயமாகிப் பதினெட்டு நிமிடங்கள் கழிந்ததன் பின்னர் இதனைத் தொழலாம். பகலின் மூன்றில் ஒரு பாகம் கழிந்த பின் தொழுவது சிறந்ததாகும். இதன் ரக்அத்துக்கள் குறைந்தது இரண்டு. கூடியது எட்டு. மத்திமமானது நான்கு ஆகும்.

ஐயம்:- சிலர் சிலவேளைகளில் வெறுமனே ஸுஜூதுகளை மாத்திரம் செய்வார்கள். அவ்வாறு ஸுஜூதுகளை மாத்திரம் கொண்ட தொழுகைகளும் இருக்கின்றனவா?

தெளிவு:- அவை தொழுகைகள் அல்ல; ஸஜதாக்கள் எனப்படுகின்றன. நபி ஸ அவர்கள் மூன்று காரணங்களுக்காக ஸஜதா செய்திருக்கிறார்கள்.

**I. ஸஜ்தா திலாவத்:** அல்குர்அனில் ஸஜ்தாவுடைய வசனங்களை ஓதும்போது அல்லது கேட்கும் போது அதனைத் தொடர்ந்து ஒரு ஸுஜூது செய்வார்கள். இது **'ஸஜ்தா திலாவத்'** எனப்படுகிறது. தொழுகையில் கூட இந்த வசனங்கள் ஓதப்படும் போது அவ்வசனத்தைத் தொடர்ந்து ஸஜ்தா செய்ய வேண்டும்.

**II.ஸஜ்தா ஸஹ்வு:** தொழுகையில் ஏற்படும் மறதிகள் அல்லது தவறுகளுக்காக ஸலாம் கொடுப்பதற்கு முன் இரண்டு ஸஜதாக்கள் செய்வார்கள். இது **'ஸஜ்தா ஸஹ்வு'** எனப்படுகிறது. முதல் அத்தஹியாத்து, குனூத் போன்ற ஸுன்னத்துக்களில் ஒன்று விடுபடுதல், தொழுகையை முறிக்கக்கூடிய ஒரு செயலை மறதியாகச் செய்தல் உதாரணம்: (ரக்அத்துக் களைக் கூட்டி அல்லது குறைத்துத் தொழல்), சந்தேகம் ஏற்படல், முதல் தக்பீர், ஸலாம் தவிர்ந்த தொழுகையின் ஏனைய முக்கிய ஓதல்களை இடம்மாற்றி ஓதுதல் போன்ற சந்தர்ப்பங்களில் ஸஜ்தா ஸஹ்வு செய்ய வேண்டும்.

**III. ஸஜ்தா ஷுக்ர் :** தனக்கு ஒரு சந்தோஷமான செய்தி கிடைத்தால் அல்லது விசேட அருள்பாக்கியம் ஒன்றைப் பெற்றால் நபி ஸ அவர்கள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் முகமாக ஸுஜூத் ஒன்றைச் செய்வார்கள். இது **'ஸஜ்தா ஷுக்ர்'** எனப்படுகிறது. 'ஸஜ்தா ஷுக்ர்' செய்கின்ற ஒருவர் நிய்யத்துடன் தக்பீர் சொல்லி ஸஜ்தா செய்த பின் ஸலாம் கொடுக்க வேண்டும்.

ஐயம்:- இந்த ஸஜ்தாக்களுக்கென விசேட ஓதல்கள் இருக்கின்றனவா?

தெளிவு:- ஸஜ்தா ஸஹ்வு, ஸஜ்தா ஷுக்ர் போன்றவற்றில் தொழுகையின் ஸுஜூதுகளில் ஓதப்படும் தஸ்பீஹ்களை ஓதலாம். ஸஜ்தா திலாவத்தின்போது நபி ஸ அவர்கள் பின்வரும் திக்ரை ஓதியுள்ளார்கள்.

سَجَدَ وَجْهِيَ لِلَّذِيْ خَلَقَهُ وَصَوَّرَهُ وَشَقَّ سَمْعَهُ
وَبَصَرَهُ فَتَبَارَكَ اللهُ اَحْسَنُ الْخَالِقِيْنَ

இதன் பொருள் பின்வருமாறு

''என் முகத்தைப் படைத்து அதை அழகிய முறையில் வடிவமைத்து அதில் காதுகளையும், கண்களையும் வைத்தவனுக்கு என்முகம் ஸஜ்தா செய்கின்றது. அழகிய படைப்பாளனாகிய அல்லாஹ் பாக்கியம் நிறைந்தவன் ஆவான்'' என்று ஓதியுள்ளார்கள்.

ஐயம் :- பர்ளான தொழுகைகளின் போது பல சந்தர்ப்பங்களில் எத்தனை ரக்அத்துக்கள் தொழுதோம் என சந்தேகம் ஏற்படுகின்றது. அப்போது என்ன செய்ய வேண்டும்?

தெளிவு :- இவ்வாறு சந்தேகம் ஏற்படும் போது குறைந்த எண்ணிக்கையைச் செய்திருப்பதாகக் கருதி தொழுகையை நிறைவேற்ற வேண்டும். பின்னர் ஸஜ்தா ஸஹ்வு செய்ய வேண்டும்.

பயான் நிகழ்ச்சியைத் தொடர்ந்து, ஐயங்களுக்குத் தெளிவு பெறும் முதல் சந்தர்ப்பம் கிடைத்த அவ்வூர் மக்கள் ஹஸ்ரத் அவர்களுக்கு நன்றி கூறிப் பிரிந்து சென்றனர்.

**பயிற்சி**

1. பின்வரும் அட்டவணையை நிரப்புக.

| ஸுன்னத்தான தொழுகைகள் | சிறப்புக்கள் | அதற்குரிய நேரம் | ரக்அத்துக்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| i) தஹஜ்ஜுத் | | | |
| ii) ளுஹா | | | |
| iii) வித்ர் | | | |

2. சுருக்கமான விடை தருக.
   i) நபிலான வணக்கங்களால் கிடைக்கும் மிக முக்கியமான நன்மை யாது?
   ii) ஸஜ்தாக்களின் வகைகளைக் குறிப்பிடுக.
   iii) ஸஜ்தா ஷுக்ர் செய்வதற்குரிய ஐந்து நிகழ்வுகளைப் பட்டியல் படுத்துக.